# துவக்கம்!

## ● மெட்ரோ ரயில் திட்டத்தில் அடுத்த கட்ட பணிகள்...
## ● 4 சுங்கச்சாவடிகளில் இன்று முதல் கட்டணம் ரத்து

சென்னை, ஆக. 30–

**மெட்ரோ இரண்டாவது கட்ட திட்டத்தில், மாதவரம் – சிறுசேரி சிப்காட், மாதவரம் – சோழிங்கநல்லூர் இடையேயான, மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணியில், திருவான்மியூர், பெருங்குடி, மேடவாக்கம் பகுதிகளில், ஆரம்ப கட்ட பணிகள் இன்று, துவங்குகின்றன. இதனால், இப்பகுதியில் உள்ள, நான்கு சுங்கச்சாவடிகளில், இன்று முதல் கட்டணம் வசூலிப்பது ரத்து செய்யப்பட்டுள்ளது.**

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாவது கட்ட திட்டத்தில், 61 ஆயிரத்து, 843 கோடி ரூபாய் செலவில், மூன்று வழித்தடங்களில், 118.9 கி.மீ., மெட்ரோ பாதை அமைக்கப்பட உள்ளது. இதற்கான ஆரம்ப கட்ட பணிகள் நடந்து வருகின்றன.

இத்திட்டத்தில், பூந்தமல்லி பைபாஸ் – கலங்கரைவிளக்கம் இடையே, 26.1 கி.மீ., மாதவரம் – சோழிங்கநல்லூர் இடையே, 45.8 கி.மீ., மாதவரம் – சிறுசேரி சிப்காட் இடையே, 47 கி.மீ., பாதை அமைக்கப்பட உள்ளது.

**மாதவரம் – சிறுசேரி சிப்காட் மெட்ரோ ரயில் பாதை, பழைய மகாபலிபுரம் சாலையில், திருவான்மியூர் – எஸ்.ஆர்.பி., டூல்ஸ் இடையே, 1.4 கி.மீ., துாரம் சுரங்கப்பாதை அமைக்க ஏதுவாக, ஆரம்பகட்ட பணிகள் இன்று துவங்கப்படுகின்றன**

### ஆரம்பகட்ட பணிகள்

இப்பாதை பணிகள் விரைவாக முடிப்பதற்காக, ஒவ்வொரு பாதையும், கட்டுமான பணிகளுக்கு, பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒப்பந்தாரர்கள் நியமிக்கப்பட்டு, பாதை அமைப்பதற்கான, ஆரம்பக் கட்ட பணிகள் நடந்து வருகின்றன.

மாதவரம் – சோழிங்கநல்லூர் மற்றும் மாதவரம் – சிறுசேரி சிப்காட் மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணியில், ஒப்பந்ததாரர்களால், பல பிரிவுகளாக, ஆரம்பகட்ட பணிகள் இரண்டு மாதமாக நடந்து வருகிறது.

பெருங்குடி, துரைப்பாக்கம், மேடவாக்கம் பகுதிகளில், மெட்ரோ பாதைக்கான ஆரம்ப கட்ட பணிகள் இன்று துவங்குகிறது.

### தடுப்பு வேலிகள்

மாதவரம் – சிறுசேரி சிப்காட் மெட்ரோ ரயில் பாதை, பழைய மகாபலிபுரம் சாலையில், திருவான்மியூர் – எஸ்.ஆர்.பி., டூல்ஸ் இடையே, 1.4 கி.மீ.,துாரம் சுரங்கப்பாதை அமைக்க ஏதுவாக, ஆரம்பகட்ட பணிகள் இன்று, துவங்கப்படுகின்றன.

இப்பாதை அமைப்பதற்கு ஏதுவாக, சாலையில், தரைக்கு அடியில் உள்ள, குடிநீர் குழாய்கள், மழை நீர் வடிகால் குழாய்கள், மின்சாரம் மற்றும், தகவல் தொடர்புகளுக்கான கேபிள்கள் அகற்றி, மாற்றி அமைக்கும் பணிகள் இன்று, துவங்கப்படுகின்றன.

சாலையில், தேவையான இடங்களில், தற்காலிக இரும்பு தடுப்பு வேலிகள் அமைக்கப்படுகின்றன. இப்பணிகள், தொடர்ச்சியாக, சோழிங்கநல்லூர் மற்றும், சிறுசேரி சிப்காட் வரை நடத்தப்பட உள்ளது.

இப்பணிகளுக்கான, பாதை அமைக்கும் சாலைகளில் உள்ள, பெருங்குடி, துரைப்பாக்கம், கலைஞர் சாலை; மேடவாக்கம் சாலைகளில் உள்ள, நான்கு சுங்கச்சாவடிகளில், கட்டணம் வசூலிப்பது இன்று முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

